<u>மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, நாமக்கல்</u>

<u>மாவட்ட நீதிமன்ற வளாகம்,</u>

காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பு மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் தேர்வுக்கு காலஅவகாசம் நீட்டிப்பு – அறிவிப்பு

(Selection of Para Legal Volunteers in Police Station for missing children and other offences against children)

தேதி : 27.04.2026

******

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Bachpan Bachao Andolan Vs Union of India and others என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படியும், தமிழநாடு அரசின் G.O.(Ms) No. 130, Dated 12.03.2026 உத்திரவுபடியும் மாண்புமிகு தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் 25.03.2026-ம் நாளிட்ட உத்திரவின் படியும் மற்றும் தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி, நாமக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் படியும், நாமக்கல் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் திருச்செங்கோடு, இராசிபுரம், பரமத்தி, சேந்தமங்கலம் மற்றும் குமாரபாளையம் ஆகிய வட்ட சட்டப் பணிகள் குழுக்களுக்கும் குழந்தை தொழிலாளர் முறை மற்றும் குழந்தைகள் கடத்தலுக்கு எதிரான குற்றங்களிலிருந்தும், கொத்தடிமைத்தனத்திலிருந்தும் காணாமல் போன குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறு வாழ்வு அளித்து கல்வி கற்பிப்பதன் மூலம் குழந்தை நட்பு சமுதாயத்தை உருவாக்க 15 “சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் (Para Legal Volunteers)” தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

மேற்படி இப்பணி சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமே, இது நிரந்தர பணிக்கானது அல்ல, முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துகொள்கிறோம்.

PLV ஆகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேவைப்படும் குறைந்த பட்ச கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு (Plus Two) ஆகும். வயது வரம்பு 25 முதல் 65 வயது வரை ஆகும். பட்டப்படிபாக (சமூகப் பணியாளர், உளவியல் (Psychology) மற்றும் தொடர்புடைய இதர துறைகளில் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வலராக கீழ்க்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. சமூக சேவை செய்யும் சமூக ஆர்வலர்கள் (அரசியல் கட்சி சாரா தன்னார்வ தொண்டு நிறுவனத்தை சார்ந்தவர்கள்)
2. திருநங்கைகள்
3. ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்
4. சட்டம் பயிலும் மாணவர்கள்
5. மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, வட்ட சட்டப் பணிகள் குழு மற்றும் காவல் நிலையத்தில் பணிபுரிகின்ற தன்னார்வ சட்டப் பணியாளர்களில் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

   அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓரண்டு காலத்திற்குப் பட்டியலிடப்படுவார்கள் அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில், DLSA – வின் தலைவரின் பரிந்துறையின் பேரில் இக்காலம் மேலும் நீட்டிக்கப்படலாம்.

சட்டத் தன்னார்வலர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகளாக பின்வருவன அவர்களின் கடமைகளாகவும் பொறுப்புகளாகவும் அமையும்.

- விசாரணையின் போது உதவுதல்
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்
- காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மீட்கப்பட்ட குழந்தைக்கு பிந்தைய கால ஆதரவு அளித்தல்
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதற்கு உடனிருந்து வழிவகை செய்தல்

சட்ட தன்னார்வலருக்கான பணி :

காணாமல் போன குழந்தை தொடர்பான வழக்கு அல்லது குழந்தைகளுக்கு எதிராக குற்றம் தொடர்பான வழக்கு ஏதேனும் பதிவாகும்போதெல்லாம், காவல் நிலைய ஆய்வாளர் (SHO) அல்லது காவல் நிலைய எழுத்தர், DLSA /TLSC க்குத் தகவல் தெரிவிக்கும் பட்சத்தில் ஒரு சட்டம் சார்ந்த தன்னார்வலராக (PLV) காவல் நிலையத்திற்கு அனுப்பி, புகார்தாரருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கோ உதவ ஏற்பாடு செய்யும்பொழுது சட்ட தன்னார்வலராக வழக்கு தொடர்பான நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட நபர் அல்லது குழந்தைக்கு உதவிபுரிதல்.

காணாமல் போன குழந்தைகள் தொடர்பான வழக்குகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பிறகுற்றங்கள் தொடர்பான விவரங்களை, காவல் நிலைய ஆய்வாளர் (SHO) சூழலுக்கு ஏற்ப DLSA க்கோ அல்லது TLSC க்கோ உடனடியாக வழங்கும் பொழுது, அது தொடர்பாக தகவல் தெரிவிக்கும் பொழுதெல்லாம், அவ்வழக்கு தொடர்பான தகவல்களை சேகரிக்க புகார்தாரர் அல்லது குழந்தைக்கு உதவி புரிதல்.

சட்டத் தன்னார்வலர்கள், மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் செயலாளரிடம் மாதந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

சட்ட தன்னார்வலர்களின் மதிப்பூதியம் :

சட்டத் தன்னார்வலர் ஒருவருக்கு, ஒவ்வொரு வருகைக்கும் ரூ. 1,000/- வீதம் மதிப்பூதியம் பெற உரிமை உண்டு: எனினும், ஒருவழக்கிற்கு அதிகபட்சமாக ரூ. 5,000/- என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டே இத்தொகை வழங்கப்படும்.

மேலும் தகவல்களுக்கு

மேற்குறிபிடப்பட்டுள்ள பிரிவினர்கள் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை https://namakkal.dcourts.gov.in/ என்ற நாமக்கல் மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 24.04.2026 ஆம் தேதி மாலை 5.30 மணிக்குள் பதிவு தபால் மூலமாக (அ) நேரிலோ விண்ணப்பிக்க கோரப்பட்டது. தற்போது பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பங்களை நேரிலோ அல்லது அஞ்சலிலோ வருகிற 08.05.2026 மாலை 5.30 மணிக்குள் அனுப்ப அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விவரம், நேர்காணல் நடைபெறும் நாள் மற்றும் நேரம் மற்றும் நேர்கானல் மூலம் தேர்வு செய்யபடுபவர்களின் விவரமும் https://namakkal.dcourts.gov.in/ என்ற நாமக்கல் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

குறிப்பு: மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும். நிரந்தர பணியென கருத இயலாது. மேலும் விரங்களுக்கு நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்ட பணிகள் குழுக்களை அனுகலாம்.

ஒப்பம் /- *****

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம்,
நாமக்கல் – 637 003.

மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, நாமக்கல்

சட்ட தன்னார்வலராக பணிபுரிவதற்கான விண்ணப்ப படிவம்

1.	பெயர்	:	
2.	தந்தை/கணவர் பெயர்	:	
3.	பாலினம்	:	ஆண்/பெண்/மூன்றாம் பாலினத்தவர்
4.	பிறந்ததேதி மற்றும் வயது (சான்றிதழை இணைக்கவும்)	:	
5.	கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்)	:	
6.	சாதி (சான்றிதழை இணைக்கவும்)	:	
7.	விலாசம்	:	
8.	தொலைபேசி எண்	:	
9.	இனம்	:	
10.	மதம்	:	
11.	தாய்மொழி	:	
12.	மின்னஞ்சல் முகவரி (E-Mail Address)	:	
13.	சமூக சேவையில் ஏதேனும் முன் அனுபவம் உள்ளதா	:	ஆம்/இல்லை
14.	திருமண நிலை	:	
15.	தாங்கள் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிந்திருப்பின் அது பற்றிய விவரம் தெரிவிக்கவும்	:	

16.	தாங்கள் எந்தப் பகுதியில் சட்ட தன்னாரவலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (டிக் செய்யயும்)	:	நாமக்கல் ☐ திருச்செங்கோடு ☐ இராசிபுரம் ☐ பரமத்தி ☐ சேந்தமங்கலம் ☐ குமாரபாளையம் ☐
17.	காவல் துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம்	:	

18. கீழ்கண்ட எந்த பிரிவின் கீழ் விண்ணப்பிக்கிறீர்கள் (அதற்கான சான்றிதழை இணைக்கவும்)

வ. எண்	பிரிவுகள்	விண்ணப்பிக்கும் பிரிவு
1.	திருநங்கைகள்	
2.	ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்	
3.	ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள்	
4.	மூத்த குடிமக்கள்	
5.	MSW பயின்றவர்கள் , சமூகப் பணியாளர், உளவியல் (Psychology) மற்றும் தொடர்புடைய இதர துறைகளில் பட்டப்படிப்பு முடித்தவர்கள்	
6.	அங்கன்வாடி பணியாளர்கள்	
7.	மருத்துவர்கள் உடல் நல நிபுணர்கள் மாணவர்கள் மற்றும் சட்ட மாணவர்கள்	
8.	அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்க பிரமுகர்கள்	
9.	மகளிர் குழுக்கள்	

19 மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்:

இடம்:

அனுப்புநர்:

பெறுநர்:

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம்,
நாமக்கல்.

பொருள்: சட்ட தன்னார்வ தொண்டராக பணியாற்ற விண்ணப்பித்தல் தொடர்பாக.

ஐயா,

நான் நாமக்கல் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பு மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக காவல் நிலையங்களில் சட்ட தன்னார்வலராக பணியாற்ற விருப்பம் கொண்டுள்ளதால், எனது சுயவிவரம் மற்றும் உரிய சான்றாவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். நான் சட்ட தன்னார்வலராக தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவை மனப்பான்மையுடன் செயல்படுவேன் என உறுதியளிக்கிறேன். மேலும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை நான் நன்றாக படித்து அறிந்து கொண்டேன்.

இப்படிக்கு,

நாள்

இடம்

விண்ணப்பதாரர் கையொப்பம்.

இணைப்புகள்

மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, நாமக்கல்

சட்ட தன்னார்வ லராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

1. மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம், மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.
2. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும் நிரந்தர பணியென கருத இயலாது.
3. மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை நாமக்கல் மாவட்ட நீதிமன்ற https://namakkal.dcourts.gov.in/ என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 24.04.2026 ம் தேதி மாலை 05.30 மணிக்குள் பதிவு தபால் மூலமாக (அ) நேரிலோ விண்ணப்பிக்க கோரப்பட்டது. தற்போது பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பங்களை நேரிலோ அல்லது அஞ்சலிலோ வருகிற 08.05.2026 மாலை 5.30 மணிக்குள் அனுப்ப அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
4. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

   தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
   மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு,
   மாவட்ட நீதிமன்ற வளாகம்,
   நாமக்கல்.

5. கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

1	பிறந்த தேதி மற்றும் வயதுக்கான சான்று	பிறப்பு சான்றிதழ் SSLC / H.S.C சான்றிதழ்
2	ஜாதி சான்று	தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட ஜாதி சான்று
3	கல்வித் தகுதி	H.S.C/ Degree சான்றிதழ்
4	இதர கல்வித் தகுதி	ஏதேனும் இருப்பின்
5	நிரந்தர முகவரிக்கான சான்று	குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதரார் அட்டை, பாஸ்போர்ட்
6	அனுபவ சான்றிதழ்கள்	ஏதேனும் இருப்பின்

6. மேலும் விவரங்களுக்கு நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்ட பணிகள் குழுக்களை அனுகலாம் (அ) https://namakkal.dcourts.gov.in/ என்ற நாமக்கல் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தையும் பின்பற்றலாம்.

ஒப்பம் /- *****

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம்,
நாமக்கல்-637 003.